வெருகல் பிரதேச சபை

திருகோணமலை மாவட்டம்

## 1. நிதிக்கூற்றுகள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2015 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 யூலை 11 ஆம் திகதி கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 யூலை 28 ஆம் திகதி கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. 2015 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 திசெம்பர் 08 ஆம் திகதி சபையின் செயலாளருக்கு வழங்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையில் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து வெருகல் பிரதேச சபையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்களின் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.2 கணக்கீட்டு குறைபாடு

பின்வரும் கணக்கீட்டு குறைபாடுகள் அவதானிக்கப்பட்டுள்ளன.

(அ) பேரேட்டின் படி வழங்கப்பட்ட முற்பணங்களின் மீதி 2015 திசெம்பர் 31 ஆம் திகதி ரூபா 850,519 தொகையாகக் உள்ள போது அத்திகதியிலுள்ளவாறான ஐந்தொகையில் இம்மீதியானது ரூபா 1,296,689 தொகையாகக் கொண்டுவரப்படாமையால் வழங்கப்பட்ட முற்பணங்கள் ரூபா 446,170 தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டுள்ளது.

(ஆ) மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்ட வாகன பற்றரி, ரிA+ப், ரயர் ஆகிய பொருட்கள் ரூபா 178,870 தொகை மூலதனச் செலவினமாகப் பொறித்தொகுதிகள் கணக்கில் கணக்கிடப்பட்டமையால் அக்கணக்கின் மீதி அத்தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 198,099 பெறுமதியான பாவனைப் பொருட்களான ஆணிகள், மின்குமிழ்கள், கத்தரிக்கோல் மற்றும் PVC குழாய்கள் என்பன மூலதனச் செலவினமாக கணக்கிடப்பட்டமையால் மூலதனச் செலவு அத்தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டப்பட்டிருந்தது.

(ஈ) பேரேட்டின் படி கடை வாடகை நிலுவை 2015 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு ரூபா. 254,820 தொகையாகக் உள்ள போதிலும் நிதிக்கூற்றுக்களில் அத்திகதியிலான நிலுவை கடை வாடகையாக ரூபா. 62,150 கணக்கிடப்பட்டமையால் ரூபா. 192,670 தொகை நிதிக்கூற்றுக்களில் குறைத்துக் காட்டப்பட்டுள்ளது.

### 1.3.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

ரூபா 47,495 கூட்டுத்தொகையான 04 சில்லறைக் கடன்கொடுத்தோர் மீதிகள் கொடுத்துத் தீர்க்கப்படாது கடந்த 08 வருட காலமாக நிதிக்கூற்றில் காட்டப்பட்டு வருகின்றது.

### 1.3.4 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட பின்வரும் ஒவ்வொரு விடயத்திற்கும் எதிரே சுட்டிக்காட்டப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| விடயம் | பெறுமதி | சமர்ப்பிக்கப்படாத சான்றுகள் |
|---|---|---|
| | ரூபா. | |
| கடன்பட்டோர் | 1,908,759 | கடன்பட்டோர் பதிவேடு |
| கடன்கொடுத்தோர் | 1,481,683 | கடன்கொடுத்தோர் பதிவேடு |
| முதலீடுகள் | 233,820 | விபரப்பட்டியல் |

### 1.3.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்கி ஒழுகாத சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன

| சட்டங்கள், விதிகள், பிரமானங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|
| (m) 1988ஆம் ஆண்டின் பிரதேச சபைகள் நிதி நிர்வாக ஒழுங்கு விதி | |
| (i) அத்தியாயம் I விதி 5(12) | பணம், களஞ்சியப்பொருட்கள் மற்றும் காசோலைகளில் கையொப்பம் இடல் என்பவை மூன்று உத்தியோகத்தர்களுக்கு நிர்வாக ரீதியாக ஒப்படைக்கப்பட்டிருந்த போதிலும் அவர்களிடமிருந்து பாதுகாப்பு பிணை பெறப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| | (ii) அத்தியாயம் X விதி_193 | ஆண்டுக்கான உள்ளபடியான வருமானம் மற்றும் செலவு தொடர்பான விபரங்கள் வரவு செலவு திட்டத்துடன் ஒப்பிடப்பட்டு முரண்பாட்டுக்கான விளக்கங்களை உள்ளடக்கிய கூற்று தயாரிக்கப்பட்டு கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. |
| (M) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்தின் நிதி பிரமாணத்தின் பிரிவு 571 | 2006 ஆம் ஆண்டு தொடக்கம் 2012 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்கான கேள்வி வைப்புக்கள், பிடிகாசு மற்றும் நானாவித வைப்புக்கள் ரூபா 277,265 தொகை தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | மாகாண நிதி ஓழுங்கு விதியின் இலக்கம் 432.2, 432.3 | சபையினால் பயன்படுத்தப்பட்டு வரும் 03 வாகனங்கள் தொடர்பாக வாகன ஓட்டப் பதிவேடு முறையாக பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | நிதி அமைச்சின் சுற்றறிக்கை இல 04/2015 | வாகனங்களிற்கான காப்புறுதிப் பத்திரம் காப்புறுதி முகவர்கள் ஊடாக அன்றி நேரடியாகப் பெற்றுக்கொள்ளப்பட வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் சபையினால் பயன்படுத்தப்பட்டு வரும் இரண்டு வாகனங்களுக்கான காப்புறுதிப் பத்திரங்களை ரூபா 82,467 தொகைக்கு காப்புறுதி முகவர்கள் ஊடாக பெறப்பட்டுள்ளது. |

2. நிதி மீளாய்வு

-----------------------------

2.1 நிதி விளைவுகள்

--------------------------------

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி 2015 திசம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான பிரதேச சபையின் செயற்பாடுகள் ரூபா 2,731,376 மீண்டு வரும் செலவினத்திற்கு மிகையான வருமானத்தினை விளைவித்திருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் செயற்பாடுகள் ரூபா 792,361 தொகையான வருமானத்திற்கு கூடிய செலவினத்தினை விளைவித்திருந்தது.

2.2 வருமான முகாமைத்துவம்

2.2.1 வருமான சேகரிப்பு செயலாற்றல்

சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம், வருமான நிலுவை என்பன தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| வருமான விடயம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | உள்ளபடியான வருமானம் | 2015 திசெம்பர் 31இல் நிலுவை மீதி |
|---|---|---|---|
| | ரூபா "000" | ரூபா "000" | ரூபா "000" |
| வாடகை | 837 | 293 | 865 |
| சேவைகளுக்கான கட்டணம் | 111 | 176 | -- |
| உரிமங்கள் | 393 | 554 | -- |

2.2.2 முத்திரைத் தீர்வை

2013 திசெம்பர் தொடக்கம் மீளாய்வாண்டின் இறுதிவரை பெறப்படக்கூடிய முத்திரைத் தீர்வை கணிப்பீடு செய்து பெற சபை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

2.2.3 வீதவரிகள் மற்றும் வரிகள்

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 134 ஆம் பிரிவுக்கு அமைய பிரதேச சபையின் அதிகாரத்திற்குட்பட்ட இடங்களிலுள்ள காணிகள் மற்றும் நிர்மாணிக்கப்பட்ட வீடுகள், கட்டடங்கள் மீது வீதவரிகள் அறவீடு செய்வதற்காக விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் ஆண்டுப்பெறுமதியை மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 முகாமைத்துவப் பலவீனம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) நிறுவனங்களிடமிருந்து நன்கொடையாகப் பெற்றுக்கொள்ளப்பட்ட 06 வாகனங்கள் ஐந்து வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக பயன்படுத்தப்பட்டு வருகின்ற போதிலும் அவற்றை சபையின் பெயருக்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பொதுநிர்வாக அமைச்சின் 09/2009 இலக்க 2009 ஏப்பிரல் 16 ஆம் திகதிய சுற்றறிக்கைகளின் பிரகாரம் சகல அரச அலுவலகங்களிலும் நேரப்பதிவு இயந்திரம் பொருத்தப்பட வேண்டுமென கூறப்பட்ட போதும் சபையில் அந்த இயந்திரம் பொருத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) 2008 ஆம் ஆண்டு தொடக்கம் 2015 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் சபையின் ஊழியர்கள் மற்றும் ஏனைய நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட ரூபா 1,296,689 தொகையான முற்பணங்கள் தொடர்பாக மாகாண நிதி ஒழுங்கு விதி 163.3 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2015 ஆம் ஆண்டிற்கான மெய்மையாய்வுச் சபை அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட 262 நூலகப் புத்தகங்களின் பற்றாக்குறை தொடர்பாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.2 பயன்படுத்தப்படாமல் உள்ள சொத்துக்கள்

சபைக்கு சொந்தமான ரூபா 2,272,800 பெறுமதியான 07 அறைகளைக் கொண்ட கடைத்தொகுதியானது 2011 ஆம் ஆண்டு தொடக்கம் மீளாய்வாண்டின் இறுதிவரை வாடகைக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்படாது விளைவற்றுக் காணப்படுகின்றது.

## 4. மனிதவள முகாமைத்துவம்

2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் மற்றும் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| பதவியணியினர் | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளவாறான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| நிறைவேற்றுனர் | 01 | 01 | -- |
| உதவியாளர்கள் | 15 | 12 | 03 |
| சிற்றூழியர்கள் | 30 | 13 | 17 |
| | 46 | 26 | 20 |

முகாமைத்துவ உதவியாளர்களுக்கான 03 பதவிகள் கடந்த 06 வருடகாலமாக வெற்றிடமாகக் காணப்பட்ட போதிலும் அதனை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகளும் மற்றும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் ஒவ்வொரு கட்டுப்பாடுகளிற்கு எதிரே சுட்டிக்காட்டப்பட்டுள்ள விடயங்கள் மீது விசேட கவனம் செலுத்த வேண்டும்.

| கட்டுப்பாடுகள் | விசேட கவனம் செலுத்த வேண்டிய விடயங்கள் |
|---|---|
| (அ) கணக்கீடு | (i) பேரேடுகள் நாளது வரையாக முறையாக பேணப்படவில்லை. |
| | (ii) சொத்துக்கள் செலவீனங்களின் தன்மை அடிப்படையில் வகைப்படுத்தப்படவில்லை. |

| | |
|---|---|
| (ஆ) நிலையான சொத்துக் கட்டுப்பாடு | (i) நிலையான சொத்துப் பதிவேடு பேணப்படவில்லை. |
| | (ii) களஞ்சியப் பேரேடு முறையாகப் பேணப்படவில்லை. |
| (இ) வருமான அறவீட்டு முகாமைத்துவம் | வருமான நிலுவைகளை அறவிட நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. |